[31st October 1962

வாழைப் பழம் ஏற்றுமதி

*1008 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சோவியத் ரஷ்யாவிற்கு நமது மாநிலத்திலிருந்து வாழைப் பழம் ஏற்றுமதி செய்வது சம்பந்தமாக மத்திய அரசு நமது மாநில அரசை ஆலோசனை கேட்டுள்ளார்களா ?

(இ) அப்படியானல் எவ்வளவு மதிப்புள்ள பழம் ஏற்றுமதி செய்வதாக உத்தேசம் ?

(உ) விவரமென்ன ?

THE HON. SRI P. KAKKAN :

(அ) Yes, Sir.

(இ) & (உ) The matter is under consideration of the Government.

திரு. மீ. கலியாணசுந்தரம் : வாழைப்பழம் ஏற்றுமதி செய்வதற்காக அரசாங்கம் நேரடியாகக் கொள்முதல் செய்து அனுப்ப உத்தேசித்திருக்கிறதா ? அல்லது தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் அனுப்ப உத்தேசித்திருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக அனுப்ப உத்தேசம். மற்ற விவரங்கள் வேண்டுமானல் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. சா. கணேசன் : 'ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்'. கேள்விகளைப் படிக்கும்போது (அ), (இ), (உ) என்ற முறையில் வருகின்றன. ஆனல் பதில்களைச் சொல்லும்போதோ (அ), (ஆ), (இ), (ஈ) என்று சொல்லுகின்ற காரணத்தினல் நாங்கள் திண்டாட வேண்டியிருக்கிறது. ஆகவே, கேள்வியில் (அ) என்று இருந்தால் பதிலிலும் (அ) என்று இருக்க வேண்டும். கேள்வியில் இனி அவற்றுக்கு (1), (2), (3) என்று வைத்துக் கொள்ளலாம் என்று நான் யோசனை கூற விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இனி அவற்றுக்கு (1), (2), (3) என்று வைத்துக் கொள்ளலாம் என்று நான் யோசனை கூற விரும்புகிறேன்.

திரு. சா. கணேசன் : எப்படியாவது குழப்பம் இல்லாமல் இருந்தால் சரிதான்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து, இதுபற்றி ராஜ்ய சர்க்கார் மத்திய அரசாங்கத்தோடு ஆலோசனை நடத்தியதாகத் தெரிகிறது. என்ன ஆலோசனை நடத்தினர்கள் ?

கனம் திரு. பூ. கக்கன் : எவ்வளவு வாழைப் பழங்கள் அனுப்ப முடியும் என்ற விவரத்தைத் தரும்படி விவசாய இலாகா டைரக்டர் அவர்களை இந்த அரசாங்கம் கேட்டது. அவர்கள் கொடுத்த

31st October 1962]

பதிலில், பூவன் பழம் 33,000 ஏக்கரில் 261,000 டன் உற்பத்தி செய்தும், சிறுமலைப் பழம் 12,000 ஏக்கரில் 48,000 டன் உற்பத்தி செய்தும், பச்சை பழம் 12,000 ஏக்கரில் 96,000 டன் உற்பத்தி செய்தும், ரஸ்தாளி 2,000 ஏக்கரில் 16,000 டன் உற்பத்தி செய்தும், முந்தன் போன்ற மற்ற வகைகளை 9,000 ஏக்கரில் 72,000 டன் உற்பத்தி செய்தும், அனுப்ப முடியும் என்று கூறியிருக்கிறார்கள். அனுப்புவதற்கு முன்பு பரிசீலனை செய்துதான் முடிவு செய்யப் படும்.

SRI R. V. SWAMINATHAN : May I know Sir, whether the Government have got any information about why this Russia is so particular in getting Indian bananas and if so, whether they want Indian bananas for edible purpose or to make any bombs or any other thing ? (Laughter).

HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, the question must be put in Russia and not here. (Laughter).

திரு. சா. கணேசன் : வாழைப்பழத்தை நீர் வற்ற வைத்து அனுப்புவது என்ற முறை பயன் உள்ளதாக இருக்காதா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது தான் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். அவர்கள் கேட்டதைத்தான் நாம் அனுப்ப வேண்டும்.

Write-off of taxes (Panchayats)

* 1009 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the Government are in receipt of some requests from Panchayats for the sanction of write-off of the taxes barred by limitation; and

(b) if so, the action taken thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) No, Sir.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இம்மாதிரி கோரிக்கைகள் பஞ்சாயத்திலிருந்து வந்தால் அரசாங்கம் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கெல்லாம் விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின்படி நடத்தப்படும்.

Government Headquarters Hospital, Cuddalore

* 1010 Q.—SRI V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) when the scheme for the construction of additional wards in the Cuddalore Headquarters Hospital was sanctioned; and

(b) the reasons for the delay in the competition of the work ?